[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION *re* CUT IN THE IMPORT OF RAW FILMS.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri Rama Arangannal regarding the situation caused by the retrenchment of a number of workers in the motion film industry, two days ago consequent on the imposition of a cut in the import of raw films.

***திரு. இராம அரங்கண்ணல் :** மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், வளர்ந்து வருகிற நவீன யுகத் தொழிலாக சினிமாத் துறை இருப்பது நாம் எல்லோரும் அறிந்ததே. சென்னை கோடம்பாக்கத்திலே இருக்கிற ஒரு ஸ்டூடியோவில் 163 தொழிலாளர்கள் 12-ந் தேதியிலிருந்து வேலையிலிருந்து நீங்கிவிட வேண்டும் என்று 7-ந் தேதியன்று உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்றையதினம்கூட, இன்னும் பலருக்கு, தொடர்ந்து அதே ஸ்டூடியோவில் பல வேலை நீக்க உத்தரவுகள் வர இருப்பதாக நான் அறிகிறேன். அந்த ஸ்டூடியோவைப் போலவே சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், மற்ற 22 ஸ்டூடியோக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஸ்டூடியோவிலும் பல தொழிலாளர்களை ஒரே காரணத்தைக் காட்டி வேலையிலிருந்து நீக்க இருப்பதாகவும் நான் அறிகிறேன். அந்த ஒரே காரணம் என்னவென்றால் கச்சா பிலிம் அதிகமான அளவுக்கு கொடுக்கப்படாததுதான். கச்சா பிலிம் அதிக அளவிலே கொடுக்கப்படாத காரணம் ஒரு புறமிருக்க, இருக்கிற அளவிலேகூட, மிக மிகக் குறைவாகவே கொடுக்கிற நெருக்கடியை மத்திய சர்க்கார் உண்டாக்கியிருக்கிறார்கள். முன்பு கொடுத்து வந்ததில் 16–2/3 சத விகிதம் அளவுதான் இன்றைய தினம் கொடுக்கக்கூடிய வகையில் மத்திய சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக ஏராளமான படத் தயாரிப்பாளர்கள், தங்களுடைய படங்களை எடுக்க முடியாமல் இருக்கிறார்கள். இப்படி 600 ப்ரொட்யூஸர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் படம் எடுக்க முடியாத நிலைமையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக ஸ்டூடியோவில் வேலை சரிவர நடைபெற முடிவதில்லை. "வேலை இல்லாதபோது நாங்கள் என்ன செய்ய முடியும் என்று" சொல்லி ஸ்டூடியோ நிர்வாகிகள் தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் துறையில், சினிமா முதலாளிகள், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், தியேட்டர்காரர்கள் என்று நாம் சொல்லிக்கொண்டே போனால், இதில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். போஸ்டர் ஒட்டுகிறவர்கள், அச்சிடுகிறவர்கள் இவர்களைப்போல் பல பேர் தொடர்புகொண்டிருக்கிற ஒரு பெரிய தொழில் இது ஆகும். ஆகவே, பிலிம் கட்டுப்பாட்டை நீக்குவதற்கு நம்முடைய அரசு மத்திய சர்க்காரை வற்புறுத்தி ஏதாவது ஒரு வழிவகையை உடனடியாகச் செய்யவேண்டும்.

9-00 a.m. நம்முடைய முன்னாள் நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் கடந்த ஆண்டு வரவு செலவு விவாதத்தில் பேசுகின்ற நேரத்தில் நீலகிரியில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கும் வேலை துரிதமாக நடைபெறுகிறதென்றும், அந்த வேலை 1962-க்குள்ளேயே முடிந்து, 1962-லே நம் நாட்டிலேயே கச்சா பிலிம் உற்பத்தி செய்யக்கூடும், நம் நாட்டில் உற்பத்தி செய்வதையே உபயோகத்திற்கும் கொண்டுவரக் கூடும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் நம்முடைய இந்நாள் நிதி அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி இப்போது தம்முடைய உரையில் குறிப்பிடவில்லை. அப்படிக் குறிப்பிடாத காரணத்தினால் 1962-க்குள் நீலகிரியில் அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று தோன்றவில்லை. ஆகவே இப்படிப்பட்ட நேரத்தில் வெளி நாட்டிலிருந்து சர்க்கார் இதுவரை இறக்குமதி செய்துகொண்டிருந்த கச்சா பிலிம் அளவை வெட்டுவது இங்குள்ள தொழிலாளர்களைப் பெரிதும் பாதிக்கும். ஸ்டூடியோ போன்ற பெரிய இடங்களைக்கூட அந்தந்த முதலாளிகள் வேறு தொழிலுக்கு மாற்றிவிடலாமா என்று யோசிக்கிறார்கள். அப்படிச் செய்வார்களேயானால் கிட்டத்

தட்ட பத்தாயிரம் தொழிலாளர்கள் வீதியில் நிற்கும்படியான நிலைமை வந்துவிடும். நம்முடைய அரசுக்குக் குழப்பமான சங்கடத்தை அது விளைவிக்கும். அந்தத் தொழில் மூலமாக இன்று அரசாங்கத்திற்கு ஏராளமான வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இவையெல்லாவற்றையும் மனதில் வைத்து இப்போது கச்சா பிலிம் 16–2/3 சதவீதம் என்று குறைத்திருப்பதை நீக்கி 50 சதவிகித அளவுக்காவது உயர்த்தி வழங்குகின்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கோரி இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, எந்தத் தொழிலிலும் தொழிலாளர்களை வைத்துத்தான் நடைபெறுகிறது. சினிமாத் தொழிலிலும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அணை கட்டுவது என்றாலும் தொழிலாளர்களை வைத்துத்தான் கட்டுகிறார்கள். மின்சாரத் திட்டங்கள் என்றால் தொழிலாளர்களை வைத்துத்தான் நிறைவேற்றுகிறார்கள். தொழிலாளர்கள் இல்லாமல் எந்தத் தொழிலும் நடைபெறுவதில்லை. இன்றைக்கு வெளி நாட்டில் இருந்து எந்தப் பொருளை இறக்குமதி செய்வது என்றாலும் நமக்குக் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணியைக் கணக்கில் கொண்டுதான், மத்திய அரசாங்கம் இதை நிர்ணயிக்கிறது. வெளிநாட்டில் இருந்து எந்த எந்தப் பொருள்களை முதலில் இறக்குமதி செய்வது, எந்த அளவு எடுத்துக்கொள்வது என்பதை எல்லாம் மத்திய அரசாங்கம்தான் முடிவு செய்கிறார்கள். அந்நிய நாட்டுச் செலாவணி அதிகமாகக் கிடைத்தால் அதற்குத் தகுந்தாற்போல இறக்குமதி செய்கின்ற பொருள்களின் கோட்டாவையும் உயர்த்துகிறார்கள். அந்நியச் செலாவணி கிடைக்காதபோது கோட்டாவைக் குறைத்துவிடுகிறார்கள். நீலகிரியில் நாம் கச்சா பிலிம் தொழிற்சாலையைய ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டமிட்டபோதுகூட, போதுமான அந்நியச் செலாவணி கிடைக்காத காரணத்தினால் அதற்கு வேண்டிய இயந்திரங்களைத் தருவிக்க முடியாமல்போய், அந்தத் தொழிற்சாலையைக் குறிப்பிட்டபடி ஆரம்பிக்க முடியாமல் போய்விட்டது. இன்றைக்கு நம் நாட்டில் கச்சா பிலிம் கட் வந்த காரணத்தினால் மட்டும் அந்தத் தொழில் பாதிக்கப் பட்டுவிடும் என்று சொல்லுவது சரியல்ல. வேறு வழியில் கிடைக்கக் கூடிய பிலிமைக் கொண்டு அந்த குறைபாட்டை நீக்கிக்கொள்ளலாம். ஆனால் அதற்கு இவர்கள் தயாராய் இல்லை. மத்திய அரசாங்கம் கோட்டாவை வெட்டிவிட்டார்கள், எனவே இன்றைக்கு வேலையில்லை என்று சொன்னால், இப்படித் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை யென்று சொல்லி அவர்களைத் தூண்டிவிட்டு, அவர்கள் மூலமாகத் தாங்கள் விரும்புவதை இந்த அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தி பெற்றுவிட முடியும் என்று எண்ணினால், அது சரியல்ல. ஆங்கிலத்தில் "பிரஷர் டேக்டிக்ஸ்" என்று சொல்வார்களே அதுபோல இப்படி அரசாங்கத்தை ஓர் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கலாம் என்று பட முதலாளிகள் நினைத்தால் அது இந்த அரசாங்கத்திடமோ, மத்திய அரசாங்கத்திடமோ நடைபெறாது என்று உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

கச்சா பிலிம் இறக்குமதி அளவு குறைக்கப்பட்டு விட்டது என்பதற்காக இப்போது உடனே தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கவேண்டிய அவசியம் இல்லை. இப்படித் தொழிலாளர்களை நிர்ப்பந்தப்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்தலாம் என்று நினைத்தால் அது முற்றிலும் தவறு முறையற்றது என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்குவது என்று வந்தால் அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்தாக வேண்டும். தொழிலாளர்கள் சார்பாக ஒரு தூதுகோஷ்டியினர் வந்து என்னிடம் குறிப்பிட்டார்கள். மேலும் அதை தொழிலாளர் இலாகா பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. தொழிலாளர் இலாகா அதிகாரிகளோடு கலந்து பேசி வேறு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தும். ஆகவே இந்த நிலைமையில் இதை அவசரப் பிரேரணையாகக் கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை. இது அவசரப் பிரேரணையும் ஆகாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[10th July 1962

MR. SPEAKER : The adjournment motion given notice of by the hon. Member Sri Rama Arangannal is based on the situation caused by the retrenchment of a number of workers in the motion film industry consequent on the imposition of a cut in the import of raw films. Mainly, this subject is dealt with by the Central Government and the responsibility of the State Government is very limited—rather, I can say it is almost 'nil'. Anyway, the matter has been raised, and the Hon. the Leader of the House has also explained the position. The circumstances clearly show that this subject is not fit for an adjournment motion. Therefore, I hold this adjournment motion out of order.

III.—CALLING ATTENTION TO STRIKE BY WORKERS IN TANNERIES IN NORTH ARCOT DISTRICT.

MR. SPEAKER : Hon. Member, Sri M. Karunanithi, will now call the attention of the Hon. the Minister for Finance to a matter of urgent public importance, viz., the strike by workers in tanneries in North Arcot district during the month of June 1962.

திரு. மு. கருணாநிதி : கனம் சபாநாயகர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் 150 தோல் பதனிடும் தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1962-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்குகிற வேலை நிறுத்தம் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, I would like to make the following statement about this matter. Neither the Government nor the Labour Department have received any strike notice intimating the intention of the workers in 150 tanneries in North Arcot district to go on strike in June 1962. However, a letter, dated 30th May 1962 signed by the President of the North Arcot District Tannery Workers Union has been received by the Government. In this letter, the President of the Union has requested the Government too implement the minimum rates of wages recommended by the Minimum Wages Advisory Committee at its meeting held on 18th September 1961 with effect from 1st October 1961 failing which he would be constrained to take direct action against all the tanneries in the district. In a subsequent letter, dated 12th June 1962, the President of the Union has stated that in view of the assurance given by the Government he is postponing the proposed direct action against the tanneries in the district by two weeks, after which he would have to resort to peaceful picketing.

The minimum wages for employment in the Tanneries have been fixed and since issued in G.O. Ms. No. 3371, Industries, Labour and Co-operatioon (Labour), dated 2nd July 1962 and will be notified in the *Fort St. George Gazettte* shortly.